## கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் I – 2018/2019

## PSC 2118 – அரசியல் சிந்தனையின் பிரதான போக்குகள்

## நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் ஆகக்கூடியதாக **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

(1) பிளேட்டோவினுடைய நீதி பற்றிய எண்ணக்கருவின் பிரதான மூலக்கூறுகளை விளக்குக.

(2) (a) அரிஸ்டோடில் எவ்வாறு அரசினை எண்ணக்கருவாக்கம் செய்தார் என்பதை விபரிக்குக.

(b) அதிகளவு நடைமுறைச்சாத்தியமான அரசு பற்றிய அரிஸ்டோடிலின் அபிப்பிராயம் யாது?

(3) 'ரோமினுடைய பலமானது அதனுடைய குடியரசின் நிறுவன ஏற்பாடுகளின் ஊடாக அடையாளப்படுத்தப்படலாம்'. பொலிபியஸினால் முன்வைக்கப்பட்ட கருத்துக் குறிப்புகளைக் கொண்டு இக் கூற்றினை பரீட்சிக்குக.

(4) பின்வரும் புனித ஒகஸ்தீனுடைய எண்ணக்கருக்களை விளக்குக:

(a) சுவர்க்க நகரம் மற்றும் மண்ணுலக நகரம்

(b) வரலாறு மற்றும் கிறித்தவ பொதுநலவாயம் ஆகியவற்றின் போராட்டம்

(5) புனித தோமஸ் அக்வைனாஸினால் முன்வைக்கப்பட்ட அரசு மற்றும் சட்டங்களின் வகைப்பாடுகள் பற்றிய கருத்துக்களை விளக்குக.

(6) தோமஸ் ஹொப்ஸ் மற்றும் ஜோன் லொக் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினுடைய முக்கிய அம்சங்களை ஒப்பிடுக.

(7) பின்வரும் அரசியல் சிந்தனையாளர்களில் யாராவது இருவரால் முன்வைக்கப்பட்ட பிரதான அரசியல் எண்ணக்கருக்கள் பற்றி குறிப்புகள் எழுதுக:

(a) சிசரோ

(b) செனகா

(c) ரூசோ

(d) மாட்டின் லூதர்

********************